[1980 பிப்ரவரி 11]

ரிப்போர்ட்' அடிக்கடி கொடுக்கிறார்கள். ஆகவே, வெதர் ரிப்போர்ட்டைப் பார்த்து, அந்த ஒரு நாள் பயணத்தை மேற்கொள்ளலாம்; கப்பலை தடுக்க வேண்டியதில்லை. அதற்கு அரசாங்கம் முன்வருமா? அதோடு, வேலை இல்லாமல் இருக்கும் காலங்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் மத்திய அரசிடம் இதைப் பற்றி எடுத்துக்கூறி, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

6. தன்னிலை விளக்கம்.

அ. உறுப்பினர் பற்றி மற்றொரு உறுப்பினர் உபயோகித்த வார்த்தைகளைக் குறித்து.

திரு ரா. உமாநாத்: சார், நான் ஏற்கனவே பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கேட்டேன். பின்னால் அனுமதி தருகிறேன் என்று சொன்னீர்கள். பர்சனல் எக்ஸ்பிளனேஷனுக்கு மட்டும் அனுமதி தாருங்கள் சொல்லிவிடுகிறேன்.

இன்று காலை 9.30 மணிக்குத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன் என்று நண்பர் சுப்பு சொன்னார். நீங்கள் அதை விளக்கினீர்கள். இருந்தாலும் "ஏற்பாடு செய்து" என்ற வார்த்தைகளையும் சேர்த்து சொன்னார்கள் It is an insinuation against a member அதற்காக வேண்டுமானால் பிரிவிலேஜ் மோஷன் மூவ் பண்ணுங்கள் என்று சொன்னார். அந்த அளவுக்கு நான் கீழ்த்தரமாக போகவிரும்பவில்லை. நான் கொடுத்திருக்கிற "கால் அட்டன்ஷன்" வருகிறது, அப்புறம் அட்ஜர்ன்மென்ட் மோஷன் வருகிறது என்ற காரணத்தால் நான் அங்கே இருந்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தேன். என்னிடம் அவர் கேட்டிருந்தால் கூட நான் சொல்லியிருப்பேன். அவர் கேட்கவில்லை. நான் குறிப்புகள் தயார் செய்தததைப் பார்த்து, அப்போதுதான் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கிறேன் என்று நினைத்துக்கொண்டார். விவரத்தையும் தெரிந்துகொள்ளாமல், என்னையும் கேட்காமல் இப்படி சொன்னது சரியல்ல. In the House we must maintian a standard,

என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு க. சுப்பு: தலைவரவர்களே, ஒரு "இம்பர்சனல் எக்ஸ்பிளனேஷன்"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள். அதற்குமேல் விளக்கம் வேண்டாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு, 1980.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

ஆ. கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று மொழிகிறேன்.

மேலும், தலைவரவர்களே, 14,வது சட்ட முன்வடிவும் இதைப்போன்று உள்ள சட்டமாக இருப்பதால் இந்த இரண்டு பற்றியும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து விட்டால் நேரம் மிச்சமாகும். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 பிப்ரவரி 4-ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.